பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்: வே. வ. இராமசாமி

குரோதி௵ ஆடி௴ ஜூலை - ஆகஸ்ட் 1964



வெளியிடுவோர்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

தியாகராயநகர் : : சென்னை—17

விலை : 25 காசு

பொருளடக்கம்

பக்கம்

1.	பணந்தரும் பனந்தும்பு—(தலையங்கம்)	...	3
2.	முன்னேற்றப் பாதையில்—திரு. வே. வ. இராமசாமி	...	5
3.	ஆக்கப் பணி செய்வீர்—திரு. கே. சம்பந்தம்	...	9
4.	நோஞ்சான் உடல் தேர்ச்சிபெற வழி	...	11
5.	பனங்கிழங்கும் பழந்தமிழ்ப் பண்பாடும்—நெல்லை. ந. சொக்கலிங்கம், B.A.		13
6.	பஞ்சாயத்துக்கள் பனைத் தொழிலுக்கு வரி விதிக்கக்கூடாது	...	16
7.	குன்றக்குடியில் எமது குரல்—என். சி. எஸ்.	...	17
8.	அனைத்திந்தியப் பனைத் தொழிலியல் நான்காவது கருத்தரங்கு	...	20
9.	சம்மேளனச் செய்திகள்	...	24
10.	பனையோலைப் பயிற்சி நிலையம்	...	25
11.	சங்கச் செய்தி	...	26
12.	பஞ்சாயத்து யூனியன் செய்திகள்	...	28
13.	புத்தக விமர்சனம்	...	29
14.	ஆடுகளை அடிக்கடி குட்டிபோடச் செய்யலாம்—ஐ. மலாஷெங்கோ	...	30

அட்டைப்பட விளக்கம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. கு. காமராஜ் அவர்கள் பனைத்தொழில் வளர்ச்சியில் மிகவும் அக்கறையும், ஆர்வமும் காட்டி, நம்மை ஊக்குவித்து வருவதை அனைவரும் அறிவர். அவருடைய 62-வது பிறந்த தின விழாவை யொட்டி மாநில சம்மேளனத் தலைவர் அவர்கள் பனைப்பொருட்களைப் பரிசு வழங்கி வாழ்த்தினார்கள். நோயற்று நெடுநாள் வாழ்ந்து பனைத் தொழில் சிறக்க ஆதரவும், அன்பும் காட்டவேண்டுமெனக் கூறி திரு. காமராஜ் அவர்களுக்குத் தமிழகப் பனைத் தொழிலாளர் பெருமக்களின் சார்பாக எமது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள்—ஆசிரியர்.

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 குரோதி௵ ஆடி௴ பாளை 10

பனந்தரும் பனந்தும்பு

(வே. வ. இராமசாமி)

பனையின் ஒவ்வொரு உறுப்பும் ஆதிகாலம் தொட்டு சமுதாயத்திற்கு மிகவும் பயன்பட்டு வருகிறது. பதநீரைத் தவிர பனையிலிருந்து பெறும் பனையோலை, மட்டை, நார், தும்பு ஆகியவற்றுள் பொருளை ஈட்டித் தருவதும், அந்நிய நாட்டுச் செலாவணியைச் சேமிக்க உதவுவதும் பனந்தும்புதான். "டாலர் சம்பாதித்துத் தரும் அருமையான பொருள் பனந்தும்பு என்பதை ஒரு சிலரே அறிவார்கள்" என்று காலஞ்சென்ற காந்தீயப் பொருளாதார நிபுணர் டாக்டர் ஜே. சி. குமரப்பா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பணம் சம்பாதித்துத் தரும் இப்பனந்தும்பை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தவர் 'மஞ்சு' என்றும், செங்கற்பட்டு மாவட்டத்தவர் 'நரம்பு' என்றும், கோவை மாவட்ட மக்கள் 'நார்' என்றும், திருநெல்வேலியிலுள்ளோர் 'தும்பு' என்றும் அழைக்கின்றனர். தும்பு சேகரிக்கும் தொழிலைத் தனிப்பட்டவர்கள் ஆட்களைக் கூலி வேலைக்கு அமர்த்திச் செய்து வருகின்றனர். இத்தொழில் புரிபவர்களைக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டால் இவர்களுக்குப் போதிய வருவாய் கிடைப்பதோடு எல்லாப் பனைத் தொழில் வல்லுநர்களும் பருவமற்ற காலத்தில் பனந்தும்பால் பணம் சம்பாதிக்க வழி பிறக்கும். கூட்டுறவுச் சங்கங்கள் பனந்தோப்புக்களை மொத்தக் குத்தகைக்கு எடுத்து இத்தொழிலை மேற்கொள்ளலாம்.

பொன்கொழிக்கும் பனைகளை நாம் தக்க வழியில் பயன் படுத்தி, நெருக்கடியான இந்நேரத்தில் அந்நிய நாட்டுச் செலாவணியைத்

தேடிக்கொடுக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு மாநில சம்மேளனம் இடையறாது பாடுபட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள நான்கு கோடிப் பனை களில் இரண்டு கோடி பனைகளிலிருந்தாவது தும்பு தயாரிக்கலாம். வடலிக் கன்றுகள், இளம் பனைகள் முதலியவற்றிலிருந்து உயர் ரகத் தும்பு கிடைக் கிறது. இதை வியாபார ரீதியில் ஆரம்பச் சங்கங்கள் மேற்கொள்ளுமானல் ஆண்டுக்கு அறு கோடி ரூபாய் பெறுமான நான்கு கோடி கிலோ பனந்தும்பு உற்பத்தி செய்யமுடியும். உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பு அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே விற்பனைப் புலத்தை அடையவேண்டும் என்ற கட்டுப்பாட்டை நமக்குள் நாமே ஏற்படுத்திக் கொண்டால் உற்பத்தி செய்பவர் களிடம் விலையை நிர்ணயம் செய்யும் உரிமை கிடைக்கும். இதனால் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற வழி உண்டாகும்.

உலகிலுள்ள சுமார் 37 நாடுகள் பனந்தும்பைக் கொள்முதல் செய் கின்றன. இதனால் இத்தொழில் வளரவும், சிறக்கவும் வாய்ப்புள்ளது. எனவே இதை ஆரம்பச் சங்கங்கள்மூலம் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யவும், உற்பத்தி செய்பவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவும் வழிசெய்யும் பொருட்டு மாநில சம்மேளனம் 60 கொள் முதல் நிலையங்களை நிறுவத் துரித ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிலையங் களின் பொறுப்பை அதிகாரிகளும், சம்மேளன நிர்வாகக் குழு உறுப்பினர்களும் ஏற்றுள்ளனர். திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம் புத்தூர் ஆகிய மாவட்டங்களில் கொள்முதல் வேலைகள் துவங்கிவிட்டன. கொள்முதல் செய்யும் மாவட்டச் சம்மேளனங்களுக்கு 2% கமிஷன் கொடுக்க மாநில சம்மேளனம் முடிவு செய்துள்ளது. இக்கொள்முதல் வேலைகளைச் செய்யவும், பனந்தோப்புக்களைக் குத்தகைக்கு எடுத்து பனந்தும்பு தயாரிக்கவும் ஆர்வமுள்ள ஆரம்பச் சங்கங்களுக்கு நிதி வழங்க மாநில சம்மேளனம் தயங்காது. பனந்தும்புக் கொள்முதலுக்காக ரூ. 20 லட்சம் முதலீடு செய்து பரீட்சார்த்தமாக இவ்வாண்டு இவ்வியாபாரத்தை மாநில சம்மேளனம் மேற் கொண்டிருப்பதால் ஆரம்பச் சங்க உறுப்பினர்கள் மாநில சம்மேளனத்தைப் பலப்படுத்தி, அதன்மூலம் நலன்பெறும் வகையில் ஆர்வப் பெருக்கோடு ஒத்துழைக்க வேண்டும்.

பணத்தரும் பனந்தும்பைக் கொள்முதல் செய்யும் வெளி நாட்டவர் பிரஷ் செய்கின்றனர். சாதாரணமாக உற்பத்தியாளர்களிடமிருந்து கிலோ ஒன்றுக்கு 40 பைசா முதல் 80 பைசா வரை விலை கொடுத்துக் கொள்முதல் செய்யப்படும் 'கோரா' தும்பை பல ரூபாய் பெறக்கூடிய பொருளாக ஆக்கி விடுகின்றனர். 'கோரா' (Raw Fibre) தும்பைச் சீவிச் சுத்திகரிக்கும்போது (Sizing of Fibre) கழிக்கப்படும் தும்பை அட்டைகள் (Hard Boards), காகிதம் (Bond paper, News print etc.) முதலியனவும், மிதி பாய்கள் (Door mats), கயிறுகள் முதலியனவும் செய்யலாம். கைக் காகித உற்பத்தி நிலையங்கள் இக்கழிவுகளைப் பயன்படுத்திக் காகிதம் செய்தால் உற்பத்திச் செலவு மிகவும் குறையும். அறுவைச் சிகிச்சையில் தையல் போடுவதற்காக ஈச்சந்தும்பு பயன் படுத்தப்பட்டதை ஒரு பிரபல டாக்டர் அடிக்கடி கூறுவார். இது உறுதி யானது; இற்றுப் போகாதது; வளையக்கூடியது. எனவேதான் மருத்துவர்கள் இதைப் பயன்படுத்தினர். பல துறைகளில் பயன்படும் இதை நாம் வீணுக்கக் கூடாது.

சேகரிக்கப்படும் பனந்தும்பை உள்ளூர்த் தேவைக்குரிய பிரஷ் (தூரிகை) செய்யவும், சுத்திகரிக்கவும் அவ்வப் பிராந்தியங்களில் தொழில் கூடங்களை நிறுவ மாநில சம்மேளனம் உத்தேசித்துள்ளது. இம்முயற்சிக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து உறுதுணை புரிந்தால் பனைத் தொழிலாளர் பெருமக்களின் வாழ்வு சிறக்கும்; நாடு வளம்பெறும்.

முன்னேற்றப் பாதையில்....

திரு. வே. வ. இராமசாமி

பனை மரத் தொழில் தமிழகத்தில் ஒரு முக்கிய குடிசைத் தொழில். அதிலும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற தென் பிராந்தியங்களில் பனை மரத்தின் ஒவ்வொரு பாகமும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. கற்கண்டு செய்தல், பனைவெல்லம் செய்தல், புட்டுக் கருப்பட்டி செய்தல், தும்பு, ஈர்க்கு முதலிய வேலைகளில் இந்தத் தென் மாவட்டங்களிலுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொன்றுதொட்டு ஈடுபட்டு வாழ்ந்துவருகின்றன. தமிழகத்தில் உள்ள 1,422 இத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 1,85,000 உறுப்பினர்கள் உள்ளனர். சுமார் 8 லட்சம் ரூபாய் பங்குத் தொகையாக இச் சங்கங்களில் செலுத்தியிருக்கிறார்கள். முக்கியமாகப் பனைத் தொழிலினுடைய அபிவிருத்தித் திட்டங்களை சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் மேற்பார்த்து வருகிறது. 6 மாவட்டங்களில் மாவட்ட சம்மேளனங்கள் இத்தொழில் வளர்ச்சிக்காகப் பணி புரிந்து வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டமும், மதுரை மாவட்டமும் சேர்ந்து இராமநாதபுரம்—மதுரை மாவட்ட சம்மேளனத்தின்கீழ் வேலை செய்துவருகின்றன. இராமநாதபும்ர மாவட்ட சம்மேளனம் 1954-ல் ஆரம்பிக்கப்பட்டது. 31—3—'63-ம் தேதி முடியவுள்ள கணக்குப்படி 122 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மொத்தம் ரூ. 75,880 பங்குத் தொகை செலுத்தியிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரப் பிரதேசங்களில் அதிகமான பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. முக்கியமாகக் கீழக்கரையை அடுத்த பிரதேசங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் பனைவெல்லம் தயாரிக்கின்றன.

புட்டுக் கருப்பட்டி :

கீழக்கரை, இராமநாதபுரம், திருப்புலாணி போன்ற இடங்கள் புட்டுக் கருப்பட்டி உற்பத்தியில் சிறப்பிடம் வகிக்கின்றன. இங்கு ஓய்வு நேர வேலையாகப் பனந் தும்பு, ஈர்க்கு சேகரிப்பதை பனைத் தொழில் வல்லுநர்களுடைய குடும்பங்கள் செய்துவருகின்றன.

ஓலைச் சாமான்கள் :

குருத்தோலைகளிலும், சாரோலைகளிலும் வர்ணங்கள் கொடுத்து அருமையான நல்ல ஓலைச் சாமான்கள் செய்வதில் இராமநாதபுரம் மாவட்டம் தொன்மைப் பெருமை வாய்ந்தது. இங்கு பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மட்டுமன்றி, மற்றவர்களும் இந்த ஓலைத் தொழில் செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். இங்குள்ள நகரத்தார்கள் செய்யும் குருத்தோலைப் பெட்டி மிகவும் பிரசித்தி பெற்றது. இராமநாதபுரத்தில் செய்யப்படும் நார்ப் பெட்டிகள், சுளகு முதலியன ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கிறது.

பதநீர் விற்பனை :

மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்த உடனேயே இராமநாதபுரத்தில் சில பகுதிகளிலும், திருநெல்வேலியிலும் பதநீர் விற்பனைக்கு அரசாங்கம் அனுமதி தந்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பதநீரைத் தலையில் சுமந்து சங்க உறுப்பினர்கள் தனித்தனியாக விற்று காலந் தள்ளுகிறார்கள். இவ்வித விற்பனை மூலம் 1963-64-ம் ஆண்டில் மட்டும் ரூ. 5,85,059 பெறுமானமுள்ள 5,30,000 லிட்டர் பதநீர் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தற்போது மாநில சம்மேளனம் கூட்டுறவு முறையில் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சுகாதார முறையில் விற்பனை செய்ய, வேண்டிய தொழிற் நுணுக்க உதவிகளை இராமநாதபுரம்

மாவட்ட சம்மேளனத்தின் மூலம் செய்து வருகிறது. இவ்விற்பனைக்குத் தேவையான அல்கதீன் பாட்டில்கள், விற்பனை சைக்கிள்கள் போன்ற உபகரணங்களை வாங்கி மாவட்ட சம்மேளனத்தின் மூலமாக ஆரம்ப சங்கங்களுக்கு கொடுத்துவருகிறது. இங்கு பதநீரை காய்ச்சுவதில் உள்ள சிரமத்தைப் போக்கவே நேரடியாகப் பதநீரை விற்க அனுமதி அளிக்கப் பட்டது.

பனைவெல்லம் செய்தல் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் தென் பகுதியில் உள்ள பனைத் தொழிலாளர்கள் அனைவரும் பனைவெல்லம் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குச் சரியானபடி மரம் கிடைக்காத காரணத்தாலும், காலாகாலத்தில் பண உதவி கிடைக்காததாலும், தனிப்பட்ட பனைவெல்ல வியாபாரிகளிடம் கடன் பெற்று அதிக வட்டி கொடுக்கின்றனர் கிழக் கரையை அடுத்துள்ள சில சங்கங்களில் மர வாடகையுடன் பனைவெல்லத்தையும் சேர்த்து வாடகையாகக் கொடுத்து வருவதாகக் கேள்விப்படுகிறேன். இப்பகுதியில் மரம் ஒன்றுக்கு ரூ. 1 முதல் ரூ. 2 வரை வாடகை செலுத்துவதாகவும், சுமார் 15 சத விகிதம் பனைத் தொழில் வல்லுநர்களுக்கு மட்டுமே ஒரு சிறிதளவு மரம் சொந்தமாக இருப்பதாகவும் தெரிகிறது. வாடகைப் பளுவும், சொந்தமில்லாமை என்ற நிலையும் இருப்பது கூடாது. குத்தகைப் பளு, மரமில்லாமை என்ற அவல நிலை மாறவேண்டும். உற்பத்தியாளர்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்காக அவர்களுக்கு நவீன கருவிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. பதநீர் காய்ச்சுவதற்கு பானைக்குப் பதிலாக வட்டக் கொப்பரைகளையும், மற்ற உபகரணங்களையும் ஆரம்ப காலத்தில் பாதி விலையிலும், இப்பொழுது முழு கிரயத்திலும் வழங்கப்பட்டுவருகிறது. அதிகமான சங்கங்கள் உள்ள இராமநாதபுரத்தில் பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் ஆண்டு முழுவதும் வேலை பார்த்துவருகின்றன.

கடன் வசதி :

தற்போது சென்னை மாநில கதர் கிராமக் கைத்தொழில் கழகம் எல்லா மாவட்டங்களுக்கும் போதிய பண உதவி அளித்துவருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 172 சங்கங்கள் இந்த உதவிகளைப் பயன்படுத்திக்கொள்ளுகின்றன. நாம் உண்ண உணவிற்கும், உடுக்க உடைக்கும், இருக்க இடத்திற்கும் எந்த வகையில் பாடுபட்டால் குறைவின்றி இருக்க முடியும் என்பதை நாம் முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும்.

லைசென்ஸ் பெறுதல் :

முதலில் லைசென்ஸ் பெறுவதில் கால தாமதம் ஏற்படுவதை தவிர்க்க மாநில கதர் கிராமக் கைத்தொழில் போர்டு இப்போது விஸ்தரிப்பு அதிகாரிகளிடம் கொடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் லைசென்ஸ் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளனர். ஆனால் இந்த மாவட்டத்தில் சில இடங்களில் லைசென்ஸ் பெறுவதில் கூட ஒரு சில சங்கங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு நம்முடைய முயற்சியில் மனம் தளர வைக்கின்றன. லைசென்ஸ் பெறுவதில் அங்கத்தினர்களும், லைசென்ஸ் வாங்கித் தருவதில் ஆரம்ப சங்கங்களும் மிகவும் கவனம் செலுத்தி மெம்பர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்க போதிய நடவடிக்கையை முன் கூட்டியே எடுக்கவேண்டும். உள்ளூர் பிரச்னைகளையும் போட்டிகளையும் மறந்து தொழில் வளர்ச்சிக்கான முறைகளை ஆராயவேண்டும் என்பது என்னுடைய முக்கியமான வேண்டுகோள்.

இராமநாதபுரத்தில் சாரோலை, குருத்தோலை கொண்டு அநேக பொருள்களை செய்கிறார்கள். முக்கியமாக சாரோலைப் பாய், ஈர்க்கு, தும்பு முதலியன தனிப்பட்ட வியாபாரிகளால் ஏராளமான அளவில் கொள்முதல் செய்யப்பட்டு வெளி நாடுகளிலும், மற்ற மாகாணங்களிலும் வியாபாரம் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த பொருள்களை எல்லாம் உற்பத்தி செய்பவர்கள் கூட்டுறவு

முறையில் வியாபாரம் செய்தால் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான ஊதியம் கிடைக்கும். இத்தொழில்களில் நமது சங்கங்கள் அக்கறைகாட்டுவதில்லை. அதன் காரணமாகத்தான் அவர்கள் உற்பத்தி செய்வதை வியாபாரிகளிடம் கொடுத்து குறைந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள். இன்று சென்னையில் தெருத் தெருவாக விற்கப்படும் பனையோலைப் பொருட்கள் எல்லாம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்துதான் வருகின்றன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பம்பாய் டெல்லி போன்ற இடங்களிலும் ஒவ்வொரு கடைகளிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் செய்யப்படும் பொருள்கள் தான் விற்கப்படுகின்றன. அவர்கள் அனைவரையும் கூட்டுறவு முறையில் கொண்டுவர போதிய நடவடிக்கை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு தேவையான மூலதனங்களையும் மற்ற உதவிகளையும் மாநில சம்மேளனமும், மாநில கதர் கிராமக் கைத்தொழில் கழகத்தாரும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

தும்பு :

கீழக்கரை, இராமநாதபுரம், தங்கச்சிமடம் போன்ற இடங்களிலிருந்து தயாரிக்கப்படும் தும்பு தூத்துக்குடியில் பதம் செய்யப்பட்டு அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை ஓரளவு நம்முடைய திருநெல்வேலி மாவட்ட சம்மேளனம் விற்பனை செய்து வருகிறது. ஆயினும் இதில் பெரும் பகுதி தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. நம்முடைய தொழிலாளர்கள் 6 மாதம் பதநீர் பருவகாலம் போக மற்ற காலங்களில் இந்த தும்பு, ஈர்க்கு, பாய் முடைதல் போன்ற தொழில்களை ஏற்றுக் கொள்வார்களேயானால் அவர்கள் உற்பத்தி செய்யும் சாமான்களை ஆரம்ப சங்கங்கள் கொள்முதல் செய்து இராமநாதபுரம் மாவட்ட சம்மேளனம் மூலமாகவும், சென்னை மாநிலப் பனைவெல்ல சம்மேளனம் மூலமாகவும் நல்ல விலைக்கு விற்று கூடிய ஊதியத்தை பெறலாம். தனிப்பட்ட தும்பு சேகரிப்பவர்கள் இருந்தாலும் கூட அவர்களை யெல்லாம் நம்முடைய இயக்கத்தில் இணைத்து பனைப் பொருள்கள் அனைத்தையும் கூட்டாக வியாபாரம் செய்ய முன்வர வேண்டும். 15—7—'63-ல் காரைக்குடியில் நடந்த தொழில் கருத்தரங்கில் சில கருத்துக்களை தெரிவித்தேன் நான் அதை திரு. சா. கணேசன் அவர்கள் மிகவும் வரவேற்று பேசினார். அதாவது, இங்கு தண்ணீர் வசதி குறைவாக இருப்பதால் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. எனவே குடிசைத் தொழில்களையே நம்பி அதிகம் பேர் வாழ்கின்றனர். அவர்களுக்கு தேவையான ஒரு பிரஷ் தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டத்தில் வைக்கலாம் என்று ஆலோசனை கூறினேன். இங்கு உற்பத்தி செய்யப்படும் பிரஷ்கள் அனைத்தையும் அரசாங்க இலாக்காக்கள், அதாவது டிரான்ஸ்போர்ட், ரயில்வே, வைத்திய இலாகா, பொதுப் பணி இலாகா ஆகியவற்றில் வாங்கி அவர்களுக்கு மிகவும் ஊக்கம் கொடுக்கலாம்.

வியாபாரம் :

இப்போது கருப்பட்டிக்கு நல்ல மார்க்கட் இருந்தபோதிலும் கூட உற்பத்தியாளர்கள் பெரும்பாலோர் தனிப்பட்ட வியாபாரிகளிடம் விற்று குறைந்த தொகை பெறுவதை தடுக்க வேண்டும். எல்லா ஆரம்ப கூட்டுறவு சங்கங்களும் மெம்பர்கள் உற்பத்தி செய்யும் வெல்லத்தை கொள்முதல் செய்து சங்கத்தின் மூலம் விற்கவேண்டும். ஒவ்வொரு சங்கத்திற்கும் தேவையான மூலதனக் கடனைக் கொடுக்க இப்போது மாநில சம்மேளனம் தயாராக இருக்கிறது. அண்மையில் மதுரையில் மாநில சம்மேளனம் ஒரு பனைப் பொருள் விற்பனை நிலையத்தை திறக்கப் போகிறது. இதன் மூலம் எல்லா மாவட்ட சம்மேளனங்களும் தங்கள் உற்பத்திப் பொருள்களை நல்ல விலைக்கு விற்க ஏதுவாகும். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்ட சம்மேளனம் இதை பெரிதும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பயிற்சி :

புதிதாகத் தொழிலை மேற்கொள்பவர்களுக்கும், புதிய முறைகளை புகுத்த விரும்புவோர்களுக்கும் பயிற்சி கொடுப்பதற்காக நாம் கடலூரில் ஒரு பயிற்சி நிலையத்தை வைத்திருக்கிறோம். அதற்கு அதிகமான ஊழியர்களை அனுப்பி நல்ல முறையில் பயிற்சி பெற்று புது முறையில் பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

மரம் வெட்டுதல் :

இந்த மாவட்டத்தில் அதிகமான மரங்கள் செங்கல் சூளைகளுக்கும், சுண்ணாம்பு காள்வாய்களுக்கும் வெட்டப்படுகின்றன. இது தடுக்கப்படவேண்டிய காரியம். இங்குள்ள பஞ்சாயத்து யூனியன்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும் பனை மரம் நடும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். இந்த திட்டத்தின் அதிகமான உற்சாகம் செலுத்திவரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இதற்கு ஆதரவு தந்து வருகிறார்கள். இந்த மாவட்டத்தில் உள்ள எல்லா பஞ்சாயத்து மரங்களையும் பொது ஏலம் விடாமல் அருகில் உள்ள பனை வெல்ல சங்கங்களுக்கே குறைந்த தொகைக்கு குத்தகைக்கு விடவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் எல்லையில் உள்ள மரங்களை பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏலத்தில் விடாமல் குத்தகைக்கு விட வேண்டும். விவசாயத்திற்கு லாயக்கற்ற இடங்களில் பஞ்சாயத்துக்களே பனங்கொட்டைகள் போட்டு பனைகளை வளர்த்தால், 15 வருடங்களுக்கு பிறகு பஞ்சாயத்துக்கு நிரந்தர வருமானம் கிடைக்கும். என் நண்பர் திரு. ஓ. சீனுவாச ரெட்டியார் அவர்கள் கவியாம்பூண்டியில் 1 லட்சம் பனை நட்டு வருகிறார்கள். தமிழகத்தினுள்ள பஞ்சாயத்துக்களில் எந்த பஞ்சாயத்து அதிகமான பனைகளை நட்டு தொழில் அபிவிருத்தி செய்ய உதவுகிறதோ அதற்கு தகுந்த பரிசு அளிக்கலாம்.

இராமநாதபுரத்தில் பனைவெல்லத் தொழில் அபிவிருத்திக்காக கீழ்க்கண்டவாறு மான்யங்களும், கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி செய்வதற்கு தக்கவாறு மான்யங்களையும் கடன்ககளையும் அதிகரித்து வழங்கி வருகிறோம்.

இம்மாவட்ட சம்மேளனத்திற்கு 1960-61 ஆண்டிற்கு கடன் மான்யம் ரூ. 20,000-ம் கொடுத்தோம், 1961–62 ஆண்டிற்கு ரூ. 13,000-ம், 1962-63 ஆண்டிற்கு ரூ. 47,000 கொடுத்தோம். ஆனால் 1963-64 ஆண்டிற்கு பனைப்பொருள் அபிவிருத்தி திட்டத்திற்கு ரூ. 2 லட்சத்து 20 ஆயிரம் வழங்கப்படுகிறது. 1964-65-ல் ரூ. 13 லட்சம் கொடுக்கப்போவதாக தீர்மானித்துள்ளோம். இம்மாவட்டத்தில் உள்ள பெரிய ஆரம்ப சங்கங்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து இயங்காவிடில் நாம் எடுக்கும் முயற்சிகள் பயனளிக்காது.

தேதுவாசனில் நமது சாதனை

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தேதுவாசன் என்ற இடத்தில் (சூரத் மாவட்டம்) 17—5—1964 தேதியன்று அனைத்திந்திய பனையேற்றியல் கருத்தரங்கு நடைபெற்றது. மாதவரம் பனைப்பொருள் உற்பத்தித் திட்டத்தில் பணியாற்றும் திரு. ஜி. சுப்பிரமணிய நாடார் பனைமரங்களைக் கயிற்றால் பிணைக்கும் போட்டியில் முதல் பரிசு பெற்றார். திரு. திருமலைக்கு பரிவுப் பரிசு அளிக்கப்பட்டது.

ஆக்கப் பணி செய்வீர்!

கே. சம்பந்தம்

★

அழாதே தம்பி அழாதே!
அறிந்தும் சாவின் அவசியத்தை

விதைத்து காந்தி வெளியிட்டார்
வியர்வை பாய்ச்சி வளர்த்துவிட்டேன்
விளைந்தது சாவி ஆவதில்லை
விரைந்து உழைத்திட எழுந்திடுவாய்.

விளைந்த பயிரை விருந்துண்ண
விரைவர் மிருக பலம்படைத்தோர்
இளைத்தவர் இந்தியர் இல்லையென்று
ஏந்தி வாளை எடுத்திடுவாய்.

உடலில் குருதி ஓடும்வரை
உலகில் மக்கள் வாழும்வரை
அணுக்கள் ஆக்கையில் அழியும்வரை
அலுத்திடு உழைத்தல் (என்) ஆசையடா.

வறுமை பிணியும் சுயநலமும்
வாட்டும் லஞ்சம் வஞ்சனைகள்
ஒழித்து உடலைத் தேற்றிக்கொள்
ஒழிந்தே ஓடுவான் உன் பகைவன்.

தடங்கல் சொல்ல மறக்காதே
சமயத்தில் முடிக்கத் தயங்காதே
உழைத்திடு உழைத்திடு உழைத்திடுவாய்
உழைப்பால் பாரதம் உயர்ந்திடவே.

மாமா சொன்னதை மறக்காதே
மகாத்மா வழியில் பிறழாதே
பாரதம் உயரும் படிப்பனைத்தும்
படித்து ஆக்கப் பணி செய்வாய்.

அதிசயப் பனை



இராஜபாளையத்திற்குத் தெற்கேயுள்ள தேவிபட்டணத்துக்கு அருகில் பதினாறு கிளைகள் உள்ள இப்பனைமரம் உள்ளது.

புகைப்படம்: திரு. ஏ. சுப்பராஜா, இராஜபாளையம்.

நோஞ்சான் உடல் தேர்ச்சிபெற வழி!

சமீபத்தில் சென்னை எஞ்சினீயரிங் கல்லூரியில் சேருவதற்கு மனுப் போட்டிருந்த மாணவர்களில் பலர் 100-க்கு 100 மார்க்குகள் வாங்கி இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய உடல் மிகவும் நோஞ்சலாக இருந்ததன் காரணமாக கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. அவர்களுடைய எடை 90 ராத்தலுக்கும் குறைவாக இருந்தது என்று தொழில் நுணுக்கக் கல்வித் துறை அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வெளியிட்டார்கள்.

மாணவர்களின் உடல் நிலை இவ்வளவு மோசமாக இருப்பதைக் கண்டு தாம் திடுக்கிட்டு வருத்தமடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொறியியல் கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்களின் எடை குறைந்த பட்சம் 90 ராத்தலாவது இருக்கவேண்டும். இனியாவது மாணவர்கள் தங்கள் உடல் வலிமையையும், எடையையும் பெருக்கிக்கொள்ள நவீன முறையில் உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

திரு. பான்சே கருத்து

மாணவர்கள் உடல் வலிவுள்ளவர்களாக இருப்பதற்கும், அவர்களுடைய எடை கூடுவதற்கும் பதநீரைப் பருகலாம் என்ற கருத்தை, டாக்டர் கே. வி. பான்சே வெளியிட்டிருக்கிறார்கள். மாணவ—மாணவிகளுக்கு 6 மாத காலத்திற்கு பதநீர் வழங்கியதில், அவர்களுடைய கூடியிருப்பதை அவர் பரிசோதனையின் மூலம் கண்டுபிடித்தார். மகாராஷ்டிரப் பல்கலைக் கழகத்தார் அவருக்கு PHD. பட்டம் வழங்கியுள்ளனர்.

துணை உணவுகள் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட பயன்:

துணை உணவு		மாணவர்கள்			மாணவிகள்		
		பரிசோதனைக்கு முடிவில் கூடுதலான எடை	கட்டுப் பாட்டுக்கு முடிவில் கூடுதலான எடை	நிகர எடை கூடுதல்	பரிசோதனைக்கு முடிவில் கூடுதலான எடை	கட்டுப் பாட்டுக்கு முடிவில் கூடுதலான எடை	நிகர எடை கூடுதல்
		ராத்தல்	ராத்தல்	ராத்தல்	ராத்தல்	ராத்தல்	ராத்தல்
1. நீரா	...	4·70	1·79	2·91	4·90	1·23	2·67
2. பனைவெல்லம்	...	2·25	1·56	0·75	1·78	0·70	1·08
3. புட்டிப் பால்	...	1·60	1·50	0·10	2·00	0·40	1·60
4. வாழைப் பழம்	...	1·52	1·50	0·04	...	...	...

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து குழந்தைகளின் கூடியிருக்கிறது என்பது தெளிவு. போஷாக்கு, வைட்டமின் சத்துக்கள் குறைவாக இருந்தால் எடை ஒரே தன்மையதாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும். ஆகையால் போஷாக்குச் சத்து இருந்தால், எடை கூடுதலாகும் என்று தெரிய வருகிறது.

முன்னோர்கள் வளர்த்த தொழில் பனைத் தொழிலே!

சென்னையில்......

சென்னையிலும் கடந்த ஆண்டில், விழுதமங்கலம் இராஜேஸ்வரி ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு பதநீர் பருவக் காலத்தில், பதநீர் வழங்கப்பட்டது. முடிவில் குழந்தைகளின் எடை கூடுதலாகியிருந்தது. அதேபோல வயது வந்தவர்களும் பதநீரைப் பருகி தங்கள் உடல் நலனையும், எடையையும் பெருக்கிக் கொள்ளலாம். பதநீர் பருவமில்லாத காலத்தில் இரண்டு தேக்கரண்டி பதநீர் மொலாஸெஸை உபயோகிக்கலாம்.

பதநீர் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் கிடைக்கும். முக்கியமாக கோவை மாவட்டத்தில் வருஷ முழுவதும் பதநீர் கிடைக்கும். பதநீரை தேடிக் குடித்து உடல் நலத்தை பேணிக்கொள்வது மாணவர்களின் முக்கியப் பொறுப்பாகும்.

ஆரம்பப் பள்ளிகள், ஹைஸ்கூல்களின் அருகில் உள்ள பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களின் உதவியால் சுத்தமான பதநீரைப் பெறலாம்.

செய்தித் துறை அமைச்சர் திரு. ஜி. பூவராகன் அவர்கள்

குறிப்பிட்ட குறை

குன்றக்குடியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளுவதற்காக வந்த செய்தித் துறை அமைச்சர் கனம் திரு. ஜி. பூவராகன் அவர்களையும், ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கனம் திரு. எம். எஸ். ஏ. மஜீத் அவர்களையும், தவத்திரு. குன்றக்குடி அடிகளாரும், இராமநாதபுரம் மாவட்டக் கிராமக் கைத்தொழில் அதிகாரி திரு. கோவிந்தராஜுலு அவர்களும், மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்களும் வரவேற்று, பொருட்காட்சி அரங்கிற்கு அழைத்துச் சென்றனர். பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் அனைத்தும் அமைச்சர்களின் கருத்தைக் கவர்ந்தன. ஆனால், இரு அமைச்சர்களும் வாங்குவதற்கு ஏற்ற அளவு பொருட்கள் இல்லை! ஒரே பொருளை இருவரும் வாங்க விரும்பினர்! ஆனால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டியதிருந்தது.

செய்தித் துறை அமைச்சர் திரு. ஜி. பூவராகன் பேசுகையில் இந்த நேரத்திற்கு எவையெவை தேவையோ அவைகள் இந்தப் பொருட்காட்சியில் இல்லை என்று குறிப்பிட்டார். வெப்ப தாகத்தைத் தணிக்க நுங்கு இல்லை! விசிறி இல்லை என்று கூறினார். பொருட்காட்சிக்கு வருவோருக்கு இது ஏமாற்றத்தையே அளிக்கும் என்றார்.

[பொருட்காட்சி நடத்துவோர் இக்குறை மறுமுறை நேராதிருக்க கவனித்துக்கொள்ளவும்]—ஆசிரியர்.

பனங்கிழங்கும், பழந்தமிழ்ப் பாட்டும்!

நெல்லை — ந. சொக்கலிங்கம், பி.ஏ.

தமிழ்ப் புலவர்கள் பொருளாழமும் புனைவும் பொருந்திவரப் பாடுவதில் வல்லவர்கள். அப்போது மதுரை மாநகரை ஆண்டுவந்த பாண்டியனுக்கு ஒரு ஐயம் எழுந்தது. "பனங்கிழங்கிற்குத் தக்க உவமை உண்டா? என அறிந்து சொல்க என்று வேண்டினான் வியன்றமிழ்ப் புலவர் பெருமக்களிடம். அனைவரும் அருந்தமிழில் உவமை கூற இயலாது தவித்தனர். மன்னனும் மனந்தளர்ந்து விட்டான். அப்போது சத்திமுற்றம் என்னும் ஊரைச் சார்ந்த தமிழப் புலவர் ஒருவர், வறுமையினால் வாட்டமுற்று அலைந்தலைந்து காலும் ஓய்ந்து வருத்தமுறத் தோன்றுகின்றார். முடிவாகப் பாண்டியனைக் காண விழைந்து மதுரையை நோக்கி வருகின்றார். மதுரையையும் அடைந்துவிட்டார்.

அங்கே புலவரின் வறுமை உச்ச கட்டத்தை எய்துகின்றது; குளிர் நடுக்குகின்றது; துயரமும், பசியும் அவருடைய காதையும், கண்களையும் அடைத்துவிட்டன. சோர்ந்து வந்த அவர் மதுரை மாநகரின் வீதியிலே குளிரால் நடுக்கமுற்றுப் பல்லோடு பல் அடித்துக் கொள்கின்ற நிலையிலிருக்கிறார். எலும்பும் தோலுமாய் ஏக்கமுற்று விளங்கும் அவர், அந்த இரவில் குளிரால் தாக்குண்டாலும் கூட, தமிழ்ப் புலமை அணைகடந்த வெள்ளம் போல் கவிதைக் கனலாக வெளிவருகின்றது. அங்கே அவரின் புதுமையுள்ளம் வறுமையிற் செம்மையுடையதாக கவிதை மழை பொழிந்தது. வானத்தைப் பார்க்கிறார்; அங்கே இரண்டு நாரைகள் இணைந்து செல்வது கண்டார். தன் வறுமை நிலையையும் மனத்திற் கொண்ட அவர் வறுமையால் வாடித்தவிக்கும் மனைவியை நினைக்கின்றார். அன்பிற்குரிய மனைவியைப் பிரிந்து வாழும் அவர் குமரித் துறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நாரைகளைக் கண்டு பரிந்து செல்கின்றது. உடனே அந்த நாரைகளைக் கண்டு கூறுகின்றார். பனங்கிழங்கினைப் பிளந்தாற் போன்ற கூர்மையான வாயையுடைய நாரையே! என் வறுமையின் நிலையை அன்பான மனைவிக்கு எடுத்துக் கூற மாட்டாயா என வேண்டுகின்றார். அப்பாடல் அருந்தமிழ்

வியாபாரப் பெருக்கத்திற்கு விளம்பரம் செய்வீர்

'பனைச் செல்வம்' நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை வாசகர்கள் அறிவீர்கள். பஞ்சாயத்து யூனியன் தகவல் நிலையங்கள், சமூகக் கல்வி நிலையங்கள், பொது நூலகங்கள் முதலியனவும் பெருவாரியாக வாங்கத் துவங்கி விட்டன. பலதரப்பட்ட மக்களிடையே இப்பனைச் செல்வம் உலவுவதாலும், தமிழகமெங்கும் உள்ள ஒவ்வொரு சிற்றூருக்கும் அனுப்பப்படுவதாலும் இதன் சிறப்பு நாளுக்கு நாள் ஓங்கி வருகிறது. கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் முதலியவை இதில் விளம்பரம் செய்தால் நல்ல பயனை அடையலாம். எனவே தங்கள் விளம்பரங்களை பனைச் செல்வம் ஆசிரியருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்—ஆசிரியர்.

உள்ளத்தின் விளக்கமாக இன்றும் விளங்கி வருகின்றது.

> " நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
> 'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன!
> பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!"

என்று விளித்து, பொன்னும் மணியும் பெருங் குன்றம் போல் மலிந்து கிடக்கும் வள மதுரையில் நள்ளிரவில் குளிரால் நடுக்க முற்று நலிந்த அவர், தன் துயர நிலையைத் தன் துணைவிக்கு எடுத்துச் சொல்லுமறு கூறுகின்றார்.

> " நீயும் நின்மனைவியும் தென்திசைக் குமரி
> ஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்
> எம்மூர் சத்திமுற்ற வாவியுள் தங்கி
> நனைசுவர்க் கூரை, கனைகுரற் பல்லி
> பாடுபார்த் திருக்கும் எம்மனைவியைக் கண்டு"

என்ன கூறவேண்டும் தெரியுமா?

> " எங்கோன் மாறன் வழுதி கூடலில்
> ஆடையின்றி வாடையின் மெலிந்து
> கையது கொண்டு மெய்யது போத்திக்
> காலது கொண்டு மேலது தழீஇப்
> பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
> ஏழையாளனைக் கண்டனம் எனுமே!"

என்று தன் உள்ளக் குமுறனை உணர்ச்சி தோன்ற எடுத்துக் கூறுகின்றார். தற்செயலாக நள்ளிரவில் வேவு பார்க்க வந்த வேந்தனின் காதில் "பழம்படுபனையின் கிழங்கு பிளந்தன்ன" என்ற தண்டமிழ்ச் சொல் விழவே புலவரின் புலமையைப் போற்றிப் பரிசுகள் பலவும் நல்கிப் புரந்தான்.

எனவே, தமிழ்ப் புலவர்களின் உவமைத் திறத்தினை உணர்த்த இவ்வொரு சான்றே போதும். அதுவும் பனங்கிழங்கையும் பவளக் கூர்வாய் நாரையையும் இணைத்துக் கூறும் பழம் பாடலை நாம் நினைவு கூர்தல் சிறப் பன்றோ!

பதநீர் விற்பனை

மாநில சம்மேளனத்தார் கூடுமானவரை சென்னை நகரின் எல்லாப் பகுதிகளிலும் பதநீர் கிடைக்க வகை செய்துள்ளனர். விற்பனை நிலையங்கள் இல்லாத இடங்களில் முச்சக்கர மிதி வண்டிகள், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் மூலமாக விநியோகிக்கின்றனர். இவ்வெப்ப காலத்திற்கு ஏற்ற இப்பானத்தை எல்லா மட்டத்திலுமுள்ள மக்கள் விரும்பிப் பருகுகின்றனர். சுமார் 10,000 பாட்டில்கள் விற்பனையாகின்றன. பதநீரின் மேன்மையை உணர்ந்த பலர் கடிதத்தின் மூலமும், நேரிலும் சம்மேளனத்தின் சேவையைப் பாராட்டுகின்றனர். பத்திரிகைகளும் பாராட்டுகின்றன.

கரும்பின் சர்க்கரையைவிட அதிக சக்தியுடையது பனஞ்சர்க்கரை!

இந்திய மொழிகளில் உங்கள் தந்திகள்

எந்த
இந்திய மொழியிலும்
நீங்கள் தந்தியை
அனுப்பலாம்
ஆனால்
தந்திச் செய்தி
தேவநாகரி எழுத்தில்
எழுதியிருக்கவேண்டும்.

ஆங்கிலத்தில் அனுப்பப்படும், வாழ்த்துத் தந்திகள், (வாழ்த்து வாக்கியங்கள் இந்தியில்), டெலக்ஸ் தந்திகள், பத்திரிக்கைச் செய்தித் தந்திகள், உயிருக்கு ஆபத்தான செய்திகள் அடங்கிய அவசரத் தந்திகள், போனோகிராம்கள், சுருக்கமான தந்தி விலாசங்களை பதிவு செய்துகொள்ளுதல், போன்ற தந்தி வசதிகள், தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டவைகளுக்கும் கிடைக்கின்றன.

இவ்வசதி 2000 தந்தி
காரியாலயங்களில் கிடைக்கிறது.

தபால் தந்தி இலாகா

DA 63/475

பஞ்சாயத்துகள் பனைத் தொழிலுக்கு வரி விதிக்கக்கூடாது

[பெர்மிட் லைசென்ஸ் வழங்குதல் சம்பந்தமான ஆய்வுக் குழு திரு. தர்மக்கண் அவர்கள் தலைமையில் கூடி கீழ்க்கண்ட முடிவுகளை சிபார்சு செய்தது.]

லைசென்சுகளும், பெர்மிட்டுகளும் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுவதில் சிக்கலான பிரச்சினைகள் ஏதும் எழவில்லை யென ஒரு மனதாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆகவே தற்போதுள்ள நடைமுறை நீடிப்பதை இக்குழு வரவேற்கிறது.

சங்க அங்கத்தினர்களுக்குப் பதநீர் இறக்கவோ, இறக்கிய பதநீரை விற்பனை செய்யவோ கஷ்டங்கள் ஏற்படக் கூடாது என்பதறகாகச் சட்ட திட்டங்களால் அனுமதிக்கப்பட்ட முறைப்படி சங்க அங்கத்தினர்கள் நடந்து வருகிறார்கள். ஆனால் விவரமறியாத பாமர ஏழைத் தொழிலாளர்கள் போலீசாரின் கெடுபிடிகளுக்கு ஆளாகி மீளாத் துயரடைந்து வருகிறார்கள். மாத இறுதியில்தான் இம்மாதிரியான தொல்லைகள் அதிகரிக்கின்றன. மிரட்டியும், உதைத்தும்கூட விவரமறியாத பனை ஏறித் தொழிலாளர்கள் துன்புறுத்தப்பட்டு தண்டனைக்கும் ஆளாக்கப்படுகின்றனர். இம்முறை ஒழிக்கப்பட்டாலொழிய தொழிலாளர்கள் போலீசாரால் தொல்லைக்கு ஆளாகும் நிலை மாறாது எனக் கருதுகிறோம்.

ஆகவே போலீஸ் நடவடிக்கைகளுக்குத் தொழிலாளர்கள் ஆளாக்கப்படுவார்களாயின் எதிர் நடவடிக்கைகளை தனிப்பட்ட முறையில் தொழிலாளி எடுக்கும் நிலைக்கு வலுவுள்ளவனாக இல்லை. இந்நிலையில் பொது நடவடிக்கையாக கோர்டுகளுக்குப் போவதாயினும் சரி அல்லது போலீஸ் அதிகாரிகளைச் சந்திப்பதாயினும் சரி சங்கமே பொறுப்பேற்று நடக்கவேண்டும்.

தவறான வழக்குகள் கொண்டு வருவது மாவட்ட, மாநில ரீதியிலுள்ள போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவதில்லை. ஆகவே இந்த அதிகாரிகள் தாலுக்கா நிலையிலுள்ள போலீஸ் அதிகாரிகள் நேர்மையைக் கடைப்பிடிக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு நமது மாநில சம்மேளனத்தின் மூலமாக போலீஸ் இலாக்காவினருக்குப் பொதுவான வேண்டுகோள் மூலம் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

பனை மரத் தொழிலாளர்களிடமிருந்து தொழில்வரியாக பஞ்சாயத்துக்கள் வசூலித்து வருகின்றன. லைசென்ஸ் பெற்று தொழில் நடத்தும் தொழிலாளர்களுக்குத் தொழில் வரியில்லை என ஏற்கனவே சட்டமிருந்தும் பஞ்சாயத்துக்கள் தொழில் வரி விதிப்பது முறையாகாது. ஆகவே மாநில சம்மேளனத்தின் மூலமாக அரசாங்கத்தை அணுகி எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் பனைத் தொழிலாளர்களுக்குத் தொழில் வரி விதித்தலாகாது என்பதை வலியுறுத்தத் தீர்மானிக்கலாயிற்று.

குழந்தைகள் நலனுக்கு பனங்கற்கண்டு சிறந்தது

குன்றக்குடியில் எமது குரல்

என். சி. எஸ்.

காரைக்குடிக்குத் தெற்கே ஏறத்தாழ ஏழு கல் தொலைவில் குன்றக்குடி அமைந்துள்ளது. திருமுருகப்பெருமான் திருவடி சேவிக்கப் பல்லாயிரம மக்களின் பாதங்கள் அத்திருத்தலத்தில் படாமலிருப்பதில்லை. ஏறத்தாழ 3,000 பேரைக் கொண்ட அச் சிற்றூருக்கு முருகனுல்தான் சிறப்பு என்ருல் மிகையில்லை. குன்றக்குடி அடிகளாரின் பேராதரவில் இராமநாதபுரம் மாவட்டப் பனைத்தொழில் வல்லுநர்களின் கருத்தரங்கு 24, 25—5—'64-ல் சிறப்புற நடைபெற்றது. திருமுருகன் அருள்நெறி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளித் திடல் வனப்புடன் காணப்பட்டதும் ஊர்ப் பொதுமக்கள் திரண்டெழுந்து அலை அலையாக வந்தனர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. காமராஜ், இந்தியத் துணைக் கண்டத்து குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் ஜாஹிர் ஹுசேன் ஆகியோர் பதநீர் 'பருகுவது போன்ற வண்ணப் படங்கள் மேடையை அழகுக்கு அழகு செய்தன. பந்தலா, பனந்தோப்பா என ஐயமுறுமளவுக்கு கருத்தரங்குப் பந்தலில் பனங்குலைகள் தொங்கின; குருத்து ஓலைத் தோரணங்கள் அசைந்தாடின. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இம்மாவட்டக் கருத்தரங்குப் பந்தலின் நுழை வாயில், வந்தோரை வரவேற்கும் முகப்புடன் பொலிவு பெற்று விளங்கியது. பரந்து விரிந்து கிடந்த பள்ளித் திடலெல்லாம் பனைச் சின்னம்! கேட்கும் ஒலியெல்லாம் பனைத் தொழில் கீதம்! பள்ளி வாயிலைக் கடந்தவுடன் பாடசாலை என்ற எண்ணம் மாறி, பனைத் தொழில் விழா என்ற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்பட்டது; எழுச்சியால் எக்காளமிட்டது.

குன்றக்குடி வீதி எல்லாம் நம்மவர் கூட்டம்; கூட்டத்திலே எழுந்த ஒலி எல்லாம் பனைபற்றி இசைத்தன! வெளியூர்களில் இருந்து பஸ்களிலும், கார்களிலும், கால்நடையாகவும் வந்த பனைத் தொழிலாளர் பெருமக்கள் மடைதிறந்த வெள்ளம் போல் கருத்தரங்குத் திடலுக்குள் புகுந்தனர். கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில் பனைத் தொழில் ஒன்றினுல் மட்டும் பிழைக்க வழி இல்லை என எண்ணியிருந்த எண்ணிறந்த பனைத் தொழில் வல்லுநர்கள் கருத்தரங்கில் தலைவர்களின் முழக்கத்தைக் கேட்டு விழி பெற்றவர்களானுர்கள்; வாழ வழியுண்டு என்ற நம்பிக்கைப் பாதையில் தெளிவாக நடக்கவும் சித்தமாயினர்.

பனைத் தொழில் தந்தை திரு. வே. வ. இராமசாமி அவர்கள், அமைச்சர்கள் மேடையிலிருக்கும் போது ஆற்றிய சொற்பொழிவு ஒவ்வொருவர் உள்ளத்தின் ஆழத்தையும் தொட்டது; நரம்புகளை தழுவி முறுகேற்றியது. காந்திநிகேதன ஆசிரமக் காரியதரிசி திரு. ரா. குருசாமி அவர்கள் நிகழ்த்திய அறிவுரை பனைத் தொழில் வல்லுநர்களிடையே தெம்பூட்டியது; முன்னேறுவதற்குரிய திட்டவட்டமான வழியை நிர்ணயிக்க வகை செய்தது. ஸ்தலஸ்தாபன அமைச்சர் கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத், செய்தித் துறை அமைச்சர் கனம் திரு. ஜி. பூவராகவன் ஆகியோர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பனைத் தொழிலாளர் பெருமக்களிடையே நம்பிக்கை உணர்வை ஊட்டியது.

குன்றக்குடியில் முழங்கிய நமது தலைவர்களின் குரல் நாடெங்கும் முழங்கவேண்டும்! முழத்துண்டுக்கு வழியின்றி வாழும் நம் தொழிலாளர்களின் நிலை உயரும் வரை அயராது படுபடவேண்டும்! அதுவே நமக்கும், நாட்டுக்கும் செய்யும் நல்ல தொண்டாகும்.

நெல்லுக்குப் பசுந்தாள் உரம்

பசுந்தாள் உரமிடும் பழக்கம் தென்ன கத்தில் பல்லாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்தபோதிலும் சில ஆண்டுகளாக இது விஞ்ஞானிகளின் கவனத்தை கவர்ந்து வரு கிறது. பசுந்தாள் உரத்தைப் பயிருக்கு இடுவது என்ருல், வயலில் ஒரு பசுந்தாள் உரப் பயிரை உண்டாக்கி, அதைப் பசுமை மாருத நிலைமையிலேயே பூமியில் புதைத்து, மண்ணுக்குள் அமிழ்த்தி, பின்னர் அந்நிலப் பரப்பின்மேல் முளைத்து வரக்கூடிய பயிரின் வளர்ச்சிக்குப் பயனுள்ளதாகச் செய்வது என்று பொருள். இவ்வாறு பசுந்தாள் உர மிடுவதால் குறைந்த செலவில் நிலத்துக்கு நல்லுரமும், ஊட்டச் சத்துள்ள சாரமும் கிடைக்கிறது. இதனுல் அதிக மகசூலை அடையவும் வழி ஏற்படுகிறது.

பசுந்தாளால் இரு விதமான பயன்கள் ஏற்படுகின்றன. வளரும் நெற்பயிருக்கு நிலத்தில் புதைக்கப்பட்டு அழுகும் பசுந்தாள் போதுமான உணவுச் சத்தைக் கொடுப்பது முதல் பயன்; இரண்டாவதாக, பசுந்தாள் புதைக்கப்பட்ட நிலத்தின் சாரத் தன்மை உயர்கிறது. இதனுல், பயிரும் நன்கு வளர்கிறது.

முன்பெல்லாம் விவசாயிகள் அதிகமாக தைன்சா (தக்கைப் பூண்டு)வையும், சணப் பையும் (சன்ஹெம்ப்) பயன்படுத்தி வந்தார் கள். இப்போது பலவிதமான பசுந்தாள் உரப் பயிர்களை எளிதிலும், மலிவாகவும் பயிரிட்டுக் கொள்ளலாம்.

இவைகளுள் ஸெஸ்பானியாவும், கிளை ரிசீடியாவும் விரைவில் வளரக்கூடிய பயிர் கள். இவைகளைப் பயிரிட அதிகக் கவனம் செலுத்தத் தேவையில்லை. விரைவில் இவை ஏராளமான பசுந்தளை தரக்கூடியவை. தளையை வெட்டி பசுந்தாளாக உரமிடலாம். வெட்ட வெட்ட இப்பயிர்களின் தளேவளரும். தக்கைப் பூண்டு, சணப்பு இரண்டிலும் இல்லாத ஓர் உரசத்து ஸெஸ்பானியாவிலும், கிளைரிசீடியாவிலும் உள்ளது. இவைகளை வயலிலேயே பயிரிடவேண்டியதில்லை; வரப்பு ஓரங்களில் பயிரிட்டால் போதும்; அல்லது இவைகளைச் சாலையோரங்களிலும் பயிரிடலாம்.

ஆனுல் விவசாயப் பழக்கங்கள் இடத் துக்கிடம் மாறுபட்டுள்ளன. ஓர் இடத்தில் விவசாயிகள் கையாளும் முறைகளை பிறி தொரு இடத்து விவசாயிகளால் பின்பற்ற முடிவதில்லை.

நெல் பயிராகும் ஒவ்வொரு பிராந்தியத் திற்கும் எந்தப் பசுந்தாள் உரம் மிகவும் ஏற்றது என்று பல சோதனைகளுக்குப் பிறகு நம் நெல் ஆராய்ச்சி நிலையங்கள் கண்டு பிடித்து, நிர்ணயித்துள்ளன. இந்த முயற்சி யில் முக்கியமாகக் கட்டாக்கிலுள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டு வந்திருக் கிறது.

முற்பட்டத்தில் முதிரும் நெல் வகை களைப் பயிரிடும் பிராந்திய விவசாயிகள் தக்கைப் பூண்டு, ஸெஸ்பானியா, பயறு முதலியவைகளைப் பயிரிட்டுப் பசுந்தாள் உரமாகப் பயன்படுத்துவது சிறந்தது. ஏப்ரல்-மேயில் விதைத்து ஆறு வாரங் களுக்குப் பிறகு வெட்டினுல் நெற்பயிருக்கு உரமாக இட ஏற்ற அளவு அதிக பசுந்தாள் கிடைக்கும்.

நீர்தேக்கமுள்ள பிராந்தியங்களுக்கு ஸெஸ்பானியா ஏற்றது. நடுப்பட்ட நெற் பயிரையும், பிற்பட்ட பயிரையும் பயிர் செய்யும் விவசாயிகளின் பொருட்டும் பல பசுந்தாள் உரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நெல் அறுவடையான பிறகு, நேர மில்லாத காரணத்தாலோ வேறு காரணங் களாலோ, பசுந்தாள் உரப் பயிரை வளர்க்க முடியாத விவசாயிகள், வயலில் நிற்கும்

நெற் பயிருடனேயே பசுந்தாள் பயிர் விதையை விதைக்கிறார்கள். அடுத்த நெற் பயிருக்கு இதை இடலாம். காட்டு அவுரி இந்த மாதிரி நிலையில் நல்ல பசுந்தாள் பயிராகக் கருதப்பட்டு வந்தது. இப்போது அவுரியைவிட ஸெஸ்பானியாவே உயர்ந்தது என்று சோதனைகள் மூலம் தெரிய வருகிறது.

நாற்றைப் பிடுங்கி நடவு செய்யாமல் நெல்லைத் தெளித்துப் பயிர் செய்கிறவர்கள் எதைப் பயன்படுத்துவது? தக்கைப் பூண்டு விதையை விதை நெல்லோடு கலந்து விதைக்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் வழி காட்டப்பட்டுள்ளது. களையெடுக்கும்போது தக்கைப் பூண்டை பிடுங்கி நெல் வயலில் புதைத்து விடலாம்.

பாசன வசதியில்லாத இடங்களிலும் கோடை மழை பெய்ததும் உழுது விதைக்கும் இடங்களிலும் தக்கைப் பூண்டையும், நெல்லையும் கலந்து விதைப்பார்கள். ஆறு வாரம் அல்லது எட்டு வாரம் கழித்து நீர் கட்டி உழுது விடும்போது பசுந்தாள் பயிர் புதைப்படுகிறது. இத்தகைய இடங்களில் ஏக்கர் ஒன்றுக்குப் பத்து ராத்தல் நைட்ரஜன் அமோனியம் சல்பேட்டு வடிவத்தில் போட்டால் நல்ல பயன் கிடைக்கிறது.

பசுந்தாள் உரப் பயிரானது பூக்கட்டும் நிலையில் இருக்கும்போது. அதாவது ஆறிலிருந்து எட்டு வாரத்துக்குள், அதை பூமியில் கலப்பது சிறந்தது என்று ஆராய்ச்சி மூலம் காட்டப்பட்டுள்ளது.

பசுந்தாள் உரம் தரும் பயனை விவசாயிகள் நாளடைவில் மேலும் மேலும் உணர்ந்து வருகிறார்கள். பசுந்தாள் உரப்பயிரை பயிரிடுவது என்பது வயலிலேயே உரத்தைப் பயிரிடுவதற்குச் சமானம் என்று அவர்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

தயாராகிவிட்டது!

வார முறையால் இடர்படுவோருக்கு மாற்று முறையாக கன்னியாகுமரி மாவட்டம் பரக்குன்னு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மறைதிரு. T. ஜேம்ஸ் அவர்கள் மேற்கொண்டுள்ள 'பனை ஒத்தி முறை' பல செயல் விளக்கங்களோடு நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல், ஒவ்வொரு பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கமும் வாங்கிப் பயனடைய வேண்டிய அரிய கருவூலமாகும்.

பரக்குன்னு பனை ஒத்தித் திட்டம்

விலை: 30 காசு (தபால் செலவு தனி)

★

கிடைக்குமிடம்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-17

தந்தி: 'பதநீர்' போன்: 42755

அனைத்திந்தியப் பனைத் தொழிலியல்

நான்காவது கருத்தரங்கு

அனைத்திந்தியப் பனைத்தொழில் கருத்தரங்கு சென்ற ஆண்டு நாகர்கோவிலில் நடந்ததுபோல நான்காவது கருத்தரங்கு 17—5—'64, 18—5—'64 ஆகிய தினங்களில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தேது வாசனிலுள்ள குஜராத் மாநில பனைத் தொழில் வித்தியாலயாவில் நடைபெற்றது.

காலையில் பனைத்தொழில் வல்லுநர்கள் பிரமுகர்கள், வழிகாட்டி நிலைய மேற்பார்வையாளர்கள், மாநில பனைத்தொழில் பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள் ஆகியோர் பயிற்சி நிலையத்தைச் சுற்றிப் பார்த்தனர். 9 மணிக்குமேல் கயிற்றுப் பாலத்தின்மூலம் பனை கடக்கும் போட்டி திடலுக்குச் சென்றனர். கீழ்க்கண்ட வல்லுநர்கள் போட்டியில் கலந்துகொண்டனர்.

1. திரு. மணிமாக்கன்—குஜராத் மாநிலம்
2. திரு. சோமாய் உக்கா ,,
3. திரு. லாலா ராணியா ,,
4. திரு. சோட்டு லாக்பா ,,
5. திரு. பாகாட் சிங் ,,
6. திரு. ஹாடாய் சிங் ,,
7. திரு. மணின்டிரா ராயோனு—வங்காளம்
8. திரு. மன்மத் மண்டல் ,,
9. திரு. குமாரவேலு நாடார்—கேரளா
10. திரு. டி. எஸ். திருமலை—தமிழ்நாடு (மாநில சம்மேளன பனஞ்சினி நுணுக்கர்)
11. ஜீ. சுப்பிரமணியம்—தமிழ்நாடு (மாநில சம்மேளன வல்லுநர்)
12. திரு. விந்து வாமன் மாச்சி —மகாராஷ்டிரா
13. திரு. ஜி. பீமண்ணு—ஆந்திரா
14. திரு. ஜே. ராமண்ணு ,,
15. திரு. சோமபாய் தயாபாய்—குஜராத்

போட்டியாளர்கள் 3 பனைகளைக் கயிற்றால் பிணைத்துக் கட்டுவதிலும், துரிதமாக பனை கடப்பதிலும் கலந்துகொண்டனர்.

துரிதமாகப் பனை கடத்தல்:—வடக்கயிற்றால் இணைத்துக் கட்டப்பட்டிருந்த முப்பது பனைகளையும் 3 நிமிடங்களில் திரு. ஹாத்தி சிங் ஏறிக் கடந்தார். இவர் குஜராத் மாநில பனைத்தொழில் வித்தியாலயாவில் பனையேற்றுப் பயிற்சிபெற்று வருகிறார். இவரது சாதனை பாராட்டத்தக்கது.

பரிசு பெற்றவர்	மாநிலம்	கடந்த நேரம்
1-வது பரிசு :		
திரு. ஹாத்தி சிங் ...	குஜராத்	3 நிமிடம்
2-வது பரிசு :		
திரு. மணீந்திர பரோயா ..	வங்காளம்	4 நிமிடம் 21 செகண்டு
3-வது பரிசு :		
திரு. மணிமாக்கன் ...	குஜராத்	4 நிமிடம் 23½ செகண்டு

கயிறு கட்டும் போட்டி:—மூன்று பனைகளின் கொண்டைகளைக் கயிற்றால் பிணைக்கும் போட்டியில் மாதவரம் பனைப்பொருள் பண்ணையில் மாநில சம்மேளன ஊழியராகப் பணியாற்றும் திரு. ஜி. சுப்ரமணிய நாடார் முதல் பரிசு பெற்றார். இரண்டாவது பரிசை குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த திரு. மணிமாக்கனும், அதே மாநிலத்தைச் சேர்ந்த திரு. ஹாத்தி சிங் மூன்றாவது பரிசையும் பெற்றனர்.

இரவு படக்காட்சியுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

18—5—'64

திரு. உக்கட், திரு. ஜெயராம் பட்டேல் ஆகியோர் கயிற்றுப் பாலத்தின் மூலம் பனை கடக்கும் முறையைச் செயல் விளக்கங்களோடு பிரதிநிதிகளுக்குச் செய்து காட்டினர். இதன் பின்னர் சரியாக காலை 9—20 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகியது. குஜராத் மாநில பனைத்தொழில் பயிற்சி நிலைய

தமிழகம் வழிகாட்டுகிறது!

விரைந்து பனைகடந்தவருக்குப் பரிசு

தேதுவாசனில் நடைபெற்ற அகில இந்திய பனைத்
தொழிலியில் கருத்தரங்கில்
திரு. ஜி. சுப்பிரமணியம் பரிசு பெறுகிறார்.

[கட்டுரை: 19-ம் பக்கம்]

முதல்வர் திரு. சி. எம். தேவ் அனைவரையும் வரவேற்றார். பனைவெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாயக் அவர்கள் தேது வாசனைச் சேர்ந்த வல்லுநர் திரு. மணி மாக்கன் கருத்தரங்கிற்குத் தலைமை வகிக்கு மாறு கேட்டுக்கொண்டு முன்மொழிந்தார். அதை குஜராத் மாநில கதர்—கிராமக் கைத் தொழில் கழகக் காரியதரிசி திரு. மனுபாய் பக்ஷி வழிமொழிந்தார். தலைமைவகித்துப் பேசிய திரு. மணிமாக்கன் கருத்தரங்கு நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுக்குமாறு திரு. மனுபாய் பக்ஷியை கேட்டுக்கொண்டார்.

கதர்—கிராமக் கைத்தொழில் குழுவின் உறுப்பினர்-காரியதரிசி (Member Secretary) திரு. ஏ. கே. கரன் கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில் "நமது நாட்டில் ஒவ்வொரு குடிசையிலும், கிராமப் புறங்களி லும் உள்ள வறுமையை ஒழிக்கவேண்டும். இதற்காக கதர்-கிராமக் கைத்தொழில் கழகம் பாடுபட்டு பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். பனைத்தொழில் வளர்ச்சியால் மட்டுமே கிராமக் குடிசைகளிலிருந்து வறுமையை விரட்டமுடியும். இந்தக் கிராமக் கைத்தொழில்கள் மூலம் இந்தியாவின் பல் கோடி மக்களும் வளமாகவும், மகிழ்வோடும் வாழ வகை செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

தொழில் நுணுக்கத் துணைவர் திரு. பாக்லே அறிக்கை வாசித்தார். திரு. சி. எம். தேவ் குஜராத் மாநில பனைத்தொழில் பயிற்சி நிலைய நடவடிக்கைகளை விளக்கிக் கூறினார். நாடெங்கும் உள்ள நான்கு வழி காட்டி நிலைய மேற்பார்வையாளர்களும் பனையேறுவதில் இதுகாறும் செய்யப்பட் டுள்ள நவீன நுணுக்கங்களைப் பற்றி விளக்கினர். பனைத்தொழில் அபிவிருத்தி யைப்பற்றி திரு. கஜானன் நாயக் பேசினார். அவர் பேசுகையில் "அனைத்திந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் இயங்கிவந்த காலத் தில் பனைத்தொழில் புரிவோருக்கு போதிய ஊதியம் கிடைக்க வழி செய்யவேண்டும் என காந்திஜீ வற்புறுத்தி வந்தார். பழைய முறையிலேயே பனையேறிக் கொண்டிருந் தால் உற்பத்திப் பெருக்கம் ஏற்படாது. பனையேறுவோரின் வருவாயை உயர்த்த வேண்டுமாயின் பனைவெல்லத்தின் விலை யைக் கணிசமான அளவு உயர்த்தவேண்டும். இதை விடுத்து பனையேற்றுத் திறனைப் பெருக்கினால் உற்பத்தி பெருகும்; வருவாய் உயரும். இதற்காக சேவா கிராமத்திலும் போர்டி ஆராய்ச்சி நிலையத்திலும் பல சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பெங் காலி முறையில் ஈச்சமரம் சீவுவது சற்று சிறந்ததாகக் கருதப்பட்டு, அதைப் பரப்பும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. பல முயற்சிகளுக்குப் பின்னருங்கூட வருமான உயர்வை ஏற்படுத்த முடியவில்லை. மத்திய அரசாங்கத்தில் உணவு—விவசாய அமைச்ச ராகப் பணிபுரிந்தபோது டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் ஒவ்வொரு வல்லுநரின் பதநீர் உற்பத்தி அளவைப் பெருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார் கள். புதுத் தில்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தாரிடம் 1949-ல் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர் களாலும் இதற்குப் பரிகாரம் காணமுடிய வில்லை.

துணைப் பனைவெல்ல ஆலோசகராக இருந்த திரு. கிருஷ்ண காமத் அவர்கள் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தபோது கயிற்றுப் பாலத்தின் மூலம் பனை கடக்கும் முறை அங்கு பின்பற்றப்படுவதைக் கண்டறிந்தார். குஜராத்திலுள்ள ஆதி வாசிகள் கயிறு, மூங்கில் முதலியவற்றால் பாலம் அமைத்துப் பனைக்குப் பனை எளிதில் கடக்கலாம் என்பதைச் செய்து காட்டினர். தகணாவில் இதற்கென பல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. பல முயற்சி களுக்குப் பின்னர் கயிற்றால் பனை கடக்கும் முறை (Aerial Rope Ways) மூலம் நூறு பனைகள் வரை ஏறலாம் என நிரூபிக்கப் பட்டுள்ளது. இதனால் ஒருவரின் மாத

வருமானம் ரூ. 60 முதல் ரூ. 100 வரை உயர வாய்ப்புள்ளது என்று குறிப்பிட்டார். பின்னர் மனுபாய் படேல் பேசினர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

கயிற்றுல் பனை கடத்தல் :

1-வது பரிசு :

பரிசு பெற்றவர்		பரிசு விவரம்
திரு. ஹாத்தி சிங் (குஜராத்)	...	ரூ. 100 பெறுமான பொருள்

2-வது பரிசு :

திரு. மணிந்திர பயோரா (வங்காளம்)	...	ரூ. 50 பெருமான பொருள்

3-வது பரிசு :

திரு. மணிமாக்கன் (குஜராத்)	...	ரூ. 25 பெறுமான பொருள்

மூன்று பனைகளைக் கயிற்றுல் இணைத்துக் கட்டுதல் :

1-வது பரிசு :

பரிசு பெற்றவர்		பரிசு விவரம்
திரு. சுப்பிரமணியம் (தமிழகம்)	...	ரூ. 50 பெறுமான பொருள்

2-வது பரிசு :

திரு. மணிமாக்கன் (குஜராத்)	....	ரூ. 25 பெறுமான பொருள்

3-வது பரிசு :

திரு. ஹாத்தி சிங் (குஜராத்)	...	ரூ. 15 பெறுமான பொருள்

இப்போட்டிகளில் குஜராத், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளம், மகாராஷ்டிரா முதலிய மாநிலங்கள் கலந்து கொண்டன. பனைவெல்லமும், இதர இனிப்புக்களும் வழங்கப்பட்ட பின்னர் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

பிற்பகல் நிகழ்ச்சி

பிற்பகல் நிகழ்ச்சி 3-30 மணிக்கு ஆரம்பமாகியது. பிரதிநிதிகள், பனைத்தொழில் ஊழியர்கள் ஆகியோர் தங்கள் சங்கங்களிலும், நிலையங்களிலும் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிக் கூறினர். பதநீர்ப் பனிக்கட்டி, பனஞ்சீனி மிட்டாய், ஐஸ் கிரீம் முதலியன வழங்கப்பட்டன.

கயிற்றுல் பனை கடக்கும் முறை எளிதாகவும், இலாபகரமாகவும் இருப்பதால் இக்கருத்தரங்கு கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றின.

1. (அ) ஒவ்வொரு மாநிலமும் குறைந்தபட்சம் ஒரு பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்திலாவது கயிற்றுல் பனை கடக்கும் முறையை பயன்படுத்த உதவியளித்து ஊக்குவிக்கவேண்டும்.

(ஆ) பாரம்பரியமாகப் பனைத் தொழில் நடைபெற்றுவரும் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு பனையேற்று வல்லுநரை நியமித்து கயிற்றுல் பனைகடக்கும் முறையை பிறர் பார்த்துப் பழகிக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

இவ்விரு தீர்மானங்களையும் மகாராஷ்டிரா மாநில பனைவெல்ல நிர்மாணிகர் திரு. தொராம்பாவி கொண்டு வந்தார். அடுத்து ஒரிசாவைச் சேர்ந்த திரு. ரத்தினக் குமார் மாநில பனைத்தொழில் பயிற்சி நிலையங்களில் கயிற்றுல் பனை கடக்கும் முறையைக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்றும், ஒவ்வொரு வகை மாத்திற்கும் தனித் தனியே பனையேற்று வல்லுநரை (Master artison) நியமிக்கவேணடும் என்றும் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். மற்றும் திரு. சி. எம். தேவ், திரு. அமர்நாத் குப்தா ஆகியோர் தீர்மானங்கள் கொண்டு வந்தனர். தேசிய கீதம் பாட கருத்தரங்கு இனிது நிறைவேறியது.

இரண்டு காரணங்கள்

இரண்டு காரணங்களுக்காக பனைவெல்லத் தொழிலுக்கு பொது மக்கள் ஆதரவு அவசியம். ஒன்று, பனைவெல்லத்தில் உயரிய அளவுச் சத்து உள்ளது. இரண்டாவதாக, கிராமங்களில் வேலையற்றோருக்கும், இதரர்களுக்கும் வேலை செய்ய வாய்ப்பு கிடைக்கிறது.

—திரு. காமராஜ்.

சம்மேளனச் செய்திகள்

மாநில சம்மேளன நிர்வாக சபைக் கூட்டம்

மாநில சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 26—4—1964-ம் தேதி சம்மேளன அலுவலகக் கட்டிடத்தில் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாநில கதர்-கிராமக் கைத்தொழில் கழகக் காரியதரிசி திரு. வெ. பத்மநாபன், குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை இயக்குநர் திரு. *T. V.* இராமானுஜன் ஆகியவர்களும் மாநில பனைவெல்ல நிர்மாணிகர் திரு. வி. கதிர்வேலு அவர்களும் கலந்துகொண்டனர்.

தீர்மானங்கள் :

1. மாவட்டப் பிரதிநிதிகள், வந்திருப்பவர்களிடம் விவாதித்து 1964–65-ம் வருடத்திய திட்டத்தைத் தயாரிக்க கீழ்க்கண்டவர்கள் அடங்கிய துணைக் குழு (*Sub-Committee*) நியமிக்கப்பெற்றது. இத்திட்டத்தை மாநில கதர்-கிராமக் கைத்தொழில் கழகத்திற்கு அனுப்பி வைக்க அதிகாரம் அளிக்கப்பட்டது.

துணைக் குழு உறுப்பினர்கள் :

(1) திரு. கே. இராமலிங்கம்
(2) திரு. வி. பி. ஆர். சிதம்பரம்
(3) திரு. பி. கிருஸ்துதாஸ்
(4) திரு. டி. கே. எம். நடராஜன்
(5) திரு. ப. இராமலிங்கம்
(6) திரு. கே. சம்பந்தம்

2. தொழில் பயிற்சி பள்ளியில் எஞ்சியிருக்கும் ரூ. 23,000-ஐ கொண்டு நிரந்தரமாக ஒரு கட்டிடம் கட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது.

3. தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த விழாமங்கலத்தில் மேற்படியூர் சங்கம் கட்டப்போகும் காலனி நிலத்திலுள்ள கிணறைப் புதுப்பிக்க ரூ. 500 வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

4. ஆரம்பச் சங்கங்களில் உறுப்பினர்கள் வாங்கும் கடன் உச்ச அளவு வரம்பை ரூ. 250 ஆக உயர்த்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த உயர்வை அங்கீகரிக்கும்படி மாநில கதர்-கிராமக் கைத்தொழில் கழகக் காரியதரிசி அவர்களைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

பேரவைக் கூட்டம்

மாநில சம்மேளனப் பேரவைக் கூட்டம் 26—4—1964 ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் நெ. 66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள சம்மேளன அலுவலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆரம்பச் சங்கங்களும், மாவட்டச் சம்மேளனங்களும், மாநில சம்மேளனமும் அவரவர் எல்லைக்கு உட்பட்டும், மூலதனத்தை அனுசரித்தும் தொழில்களை நடத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

2. திருச்செங்கோட்டில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டன. முதல் 11 தீர்மானங்களை மாநில கதர்-கிராமக் கைத்தொழில் குழுவுக்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

3. மதுரை மணி நகரிலுள்ள சரஸ்வதி பாடசாலைக் கட்டிடம் இடிந்து விழுந்ததால் அகால மரணம் அடைந்த மாணவிகளுக்காக இப்பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அன்னார் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறது.

4. சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்களுக்கு விருதுநகரில் நடந்த 66-ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அன்னார் நீடுழி வாழ்ந்து, மாநில சம்மேளனத்திற்கு ஊக்கமும், உழைப்பும் தந்துதவ வேண்டுமென்று கோரி இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

5. பனைத் தொழில்பற்றி இதுவரைக்கும் எவரும் விவரிக்காத விளக்கங்களுடன் நாட்டுக்கும், தொழிலுக்கும் 'பனைத் தொழில்' என்ற படைப்பை அளித்த நூலாசிரியர் திரு. கே. சம்பந்தம் அவர்களின் சேவையை இப்பேரவை பாராட்டுகிறது.

6. மாநில மாவட்ட சம்மேளங்களுக்குப் பதநீர் விற்பனை லைசென்சுகள் புதுப்பிக்க பல மாதங்கள் ஆவதால் குறிப்பிட்ட காலத்தில் விற்பனை துவங்க இயலாமல் போகிறபடியால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை லைசென்சுகள் வழங்க வேண்டுமெனத் தமிழ்நாடு அரசாங்கத்தை மாநில கதர்-கிராமக் கைத் தொழில் கழகத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கிறது.

பனையோலைப் பயிற்சி நிலையம்

எழும்பூரிலுள்ள போலீசார் குடியிருப்பில் பனையோலைப் பயிற்சி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. போலீசார் குடும்பத்தைச் சேர்ந்த பத்துப் பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மாநில சம்மேளனம் இந்நிலையத்திற்கு ரூ. 45—55 பெறுமான 245 ஓலைக்கட்டுகள் வினியோகித்தது. கிராமிய செக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மே மாதத்தில் மட்டும் 5,000 பனையோலை நாடாத் தொப்பிகளை வினியோகித்துள்ளது. இங்கு ஓலைப் பொம்மைகள், விளையாட்டு சாமான்கள் செய்யப்படுகின்றன. பம்பாய் போலீஸ் நல பனையோலைப் பயிற்சி நிலையத்தில் பணியாற்றும் குமாரி பிரபா 9—5—1964-ல் எழும்பூர் நிலையத்தைப் பார்த்துச் சென்றார்.

அனைத்திந்திய பனைவெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாயக் அவர்கள் 15—5—1964-ல் இந்நிலையத்தைப் பார்வையிட்டார்கள். பயிற்சி பெறும் பெண்கள் இதை முழுநேர வேலையாகச் செய்தால் ரூ. 30 மாத ஊதியம் பெறலாம் என ஆலோசனை கூறினார்கள்.

இந்நிலையத்தில் கீழ்க்கண்ட பொருட்களை 25—11—'63 முதல் 25—3—'64-க்குள் பயிற்சியாளர்கள் உற்பத்தி செய்துள்ளனர்.

	விவரம்	எண்ணிக்கை
1.	தடுக்குகள் ...	304
2.	கூடைகள் ...	9
3.	கொட்டான் (சிறியது) ...	142
4.	தொப்பி நாடா ...	2,232 அடி
5.	நாட்காட்டிக்கான ஓலை (Sized leaf for Calender).	5,600
6.	விசிட்டிங் கார்டுகள் ...	210
7.	தொப்பிகள் ...	8

இந்நிலையத்தில் பயிற்சி பெற்று வருபவர்களின் வருமான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	பயிற்சியாளரின் பெயர்		சம்பாதித்த ஊதியம்	வேலை செய்த நேரம் (மணிகளில்)	ஒரு மணி நேர வருமானம்
			ரூ. காசு		காசு
1	குமாரி ராதா	...	34—77	240	14
2	திருமதி சரோஜா	...	33—27	120	28
3	திருமதி பார்கவி	...	22—50	160	14
4	குமாரி கே. லலிதா	...	18—90	120	17
5	திருமதி கிருஷ்ணவேணி	...	21—45	120	18
6	மீனாட்சி	...	20—39	200	10
7	குமாரி T. லலிதா	...	18—21	80	23
8	திருமதி பூஷணம்	...	13—22	120	11
9	தனலட்சுமி	...	12—86	80	16
10	கனகதுர்க்கா	...	12—07	80	15
	மொத்தம்	...	207—68	1320	

இவர்களின் ஒரு மணி நேர சராசரி வருமானம் 15 காசு ஆகிறது. இதை இவர்கள் பொழுதுபோக்காகச் செய்யாமல் சற்று கவனத்துடன் செய்வார்களாயின் ஒரு மணி நேரத்தில் 31 காசு சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.

மாநில சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்களும், துணைப் போலீஸ் கமிஷனர் திரு. ராமலிங்கம் அவர்களும் இந்நிலையத்தைப் பார்வையிட்டனர்.

தொழிற்சாலை புகைகளாலும் புற்றுநோய் ஏற்படும்

சிகரெட் பிடிப்பது, தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் புகை, காற்று மண்டலத்தில் சேர்ந்து சுவாசிக்கப்படுவது, இவைகளால் சுவாசப்பையில் புற்றுநோய் ஏற்படுவது சாத்யம் என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சங்கச் செய்தி

தெற்கு பொய்யூர் (Z-47) பனைவெல்ல உற்பத்தி விற்பனை சங்கம்

மாதாந்திர அறிக்கை (8—4—'64)

சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தேதி : 24—12—'47

1964-ம் ஆண்டிற்கு புதிய லைசன்ஸ் வழங்கப்பட்ட தேதி : 30— 1—'64

	கிலோ	கிராம்
4—3—'64 முதல் 30—3—'64 முடிய மெம்பர்களிடமிருந்து உற்பத்தியாகி வந்த கருப்பட்டி ...	1,781	500
	ரூ.	காசு
அதன் கிரயம் ...	1,428	60
மெம்பர்கள் பட்டுவாடா ...	1,375	99
அதன் கமிஷன் ...	52	61

மெம்பர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்ட தேதி : 1—2—'64

மொத்தம் வழங்கப்பட்ட லைசன்ஸ்தாரர்கள்—38

தற்சமயம வேலைசெய்யும் லைசன்ஸ்தாரர்கள்—38

* * *

மாதாந்திர அறிக்கை (6—5—'64)

சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தேதி : 24—12—'47

1964-ம் ஆண்டிற்கு புதிய லைசன்ஸ் வழங்கப்பட்ட. தேதி . 3— 1—'64

	கிலோ	கிராம்
1—4—'64 முதல் 29—4—'64 வரை மெம்பர்களிடமிருந்து உற்பத்தியாகி வந்த கருப்பட்டி ...	3,725	400
	ரூ.	காசு
விற்பனையில் பில்படி அதன் கிரயம் ...	2,744	11
மெம்பர்கள் பட்டுவாடா ...	2,661	00
அதன் கமிஷன் ...	83	11

மெம்பர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்ட தேதி : 10—1—'64

மொத்தம் வழங்கப்பட்ட லைசன்ஸ்தாரர்கள்—38

தற்சமயம் வேலைசெய்யும் லைசன்ஸ்தாரர்கள்—37

ஆ. யோவான்,
காரியதரிசி.

K. No. 1088 புதுசூரிபாளையம் கருப்பட்டி உற்பத்தி கூட்டுறவு சங்கம், புதுசூரிபாளையம்

உற்பத்திப் பொருள் விவரம்

1947-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28-ம் தேதியில் சங்கம் 145 அங்கத்தினர்களைக்கொண்டு சங்கம் பதிவு செய்து 1964-ம் வருஷம் மார்ச்சு முடிய 287 அங்கத்தினராக உயர்வுபெற்று சங்கம் வளர்ந்து வருகிறது.

நாளதுவரை யாதொரு குறையும் இன்றி சங்கத்தை நடத்தி வருகிறார்கள். மெம்பர்களின் ஒத்துழைப்பின்பேரில், 1962–63-ம் வருஷத்தில் சங்கம் B வகுப்பில் வைக்கப்பட்டது.

சங்கம் ஆரம்பித்த வருஷத்திலிருந்து நாளது வரை ஸ்ரீ ரங்கசாமி தலைவராக பணியாற்றி வருகிறார், சங்கம் மெம்பர்களுக்கு ரூ. 4,000 குறுகிய கால கடனாக வழங்கியுள்ளது.

சங்கம், 10 வருஷ கடனுக்கு, கவர்ன்மெண்ட் பாண்ட் வாங்கியுள்ளது ரூ. 300.

சங்கம் க்ஷேம நிதிக்காக ஒதுக்கியுள்ளது ரூ. 962=38 நிகர லாபம், ரூ. 709=87 1962–63 முடிய.

* * *

1964-ம் வருஷம் மே மாதம் 25-ந் தேதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு மேற்படி சங்க அலுவலகத்தில் கூடிய மகாசபை மீட்டிங் நடவடிக்கைகள் ஆஜர் மெம்பர்கள் தலைவர் உள்பட 150 மெம்பர்கள்.

விஷயம் 1

நமது சங்கத்திற்கு 1964–65 வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுத்தல்.

தீர்மானம் 1

மெம்பர் நெ. 1 ரங்கசாமி, 14 அங்கப்ப நாடார், 253 பழனிசாமி, 190 குப்புசாமி நாடார், 3 ராமசாமி நாடார் ஆகிய ஐந்து அங்கத்தினர்களை 1964—65 வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்களாக மகா சபை ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது.

பஞ்சாயத்து தீர்மானம்

நமது சங்கத்திற்கு 1 ரங்கசாமி நாடார் தலைவராகவும், 14 அங்கப்ப நாடார் காரியதரிசியாகவும் இதர மூன்று மெம்பர்களும் பஞ்சாயத்து மெம்பராகவும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீ ரங்கசாமி,
தலைவர்.

---

0. 1295, குலயநேரி பனைவெல்ல கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம், திரிகூடபதி

1—1—'63 முதல் 31—12—'63 முடிய

பனைவெல்லக் கொள்முதல் கிலோ.	14,212
விற்பனை கிலோ ...	14,210
இருப்பு கிலோ ...	2

		ரூ.	காசு
பனைவெல்லக் கொள்முதல்	...	10,984	49
பனைவெல்லம் விற்பனை	...	11,385	91
ஆதாய வரவு மொத்தம்	...	401	42
கிளார்க் சம்பளம் சிப்பந்தி செலவு	...	341	04
நிகர இருப்பு ஆதாயம்	...	60	38

ருபாய் அறுபது, பைசா முப்பத்து எட்டும்.

1964-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20-ந் தேதி கூடிய மகாசபை கூட்டத்தில் மேலே கண்டபடி உள்ள கணக்குகளை சரி பார்த்து புதிய தலைவரும் புதிய மெம்பர்களும் 1964–65-ம் வருஷத்திற்கு கீழ்க்கண்டவர்களை தேர்ந்து எடுக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அ. சங்கரலிங்க நாடார் (தலைவர்)
சு. ராமசாமி நாடார் (காரியதரிசி)
வ. வன்னியப்பெருமான் நாடார்

உறுப்பினர்கள் :

மா. குமாரசாமி நாடார்
S. முத்துசாமி நாடார்.

தலைவர் உள்பட மெம்பர்கள் 4-லும் தேர்ந்து எடுக்கப்பட்டது.

அ. சங்கரலிங்க நாடார்,
தலைவர்.

பதநீர் பற்றிய திரைப்படம்

மாநில சம்மேளனம் பதநீரின் மேன்மைகளை விரிவான அளவு பொது மக்களிடையே பரப்பும் நோக்கத்துடன், அதன் ஊட்டச் சத்துக்கள், உயிர்ச் சத்துக்கள், மருத்துவப் பயன்கள் பற்றிய திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். இப்படத்தை தயாரிக்க மாநில கதர்—கிராமக் கைத்தொழில் கழகம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இப்படத்தின் நீளம் 1,000 அடி இருக்கும். விரைவில் படப்பிடிப்பு துவங்குவதற்குத் துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. டைரக்ட் செய்யும் பொறுப்பை திரு. எஸ். டி. சுந்தரம் ஏற்றுள்ளார்.

திரு. எஸ். டி. சுந்தரமும், திரு. பாலுவும் படப்பிடிப்புக்கான இடத்தைத் தேர்ந்தெடுக்க மாதவரத்திலுள்ள நமது பண்ணையைச் சுற்றிப் பார்த்தனர்.

பஞ்சாயத்து யூனியன் செய்திகள்

செய்யூரில் கட்டிடத் திறப்பு விழா

லத்தூர்: பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த செய்யூர் கிராமத்தில் 11—6—1964 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் மேல் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு முதலமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் ரூ. 12,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளியின் பிரதான கட்டிடத்தைத் திறந்து வைத்ததுடன், மேட்டுக் குடிநீர் தேக்கத்தொட்டி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டியும், அமரர் நேருஜியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தும், லத்தூர் பஞ்சாயத்து யூனியனில் நெல் அறுவடை போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கினர்.

தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை அமைச்சர் கனம் ஜி. பூவராகன் அவர்கள் ரூ. 5,400 மதிப்பில் கட்டப்பட்டுள்ள பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தும், அலுவலகக் கட்டிடத்திற்கு பொறுத்தம்பட்டுள்ள மின்விளக்கை ஏற்றி வைத்தும், தேசத தலைவர்களின் படங்களைத் திறந்து வைத்தார்.

லோகல் நூல் நிலையக் குழுவின் தலைவர் உயர்திரு டி. புருஷோத்தம் அவர்கள் நூல் நிலையக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

உயர்திரு ஒ. வெங்கடசுப்பா ரெட்டியார் எம்.எல்.ஏ அவர்களும், உயர்திரு பி. பரமேஸ்வரன், எம்.எல்.ஏ. அவர்களும் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளிக்கு ரூ. 6,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ள இரண்டு இணைப்பு கட்டிடங்களையும் திறந்து வைத்தார்கள்.

செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு எஸ். கிருஷ்ணசாமி, ஐ.ஏ.எஸ். அவர்கள் வானொலி மன்ற வானொலிப் பெட்டியை இயக்கி வைத்தார்.

லத்தூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் உயர்திரு எம். இராமகிருஷ்ண ரெட்டியார் அவர்கள் செய்யூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த மேற்குக் காலனியில் ரூ. 3,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

பிறகு உயர்திரு. வி. கே. இராமசாமி முதலியார், எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கனம் எம். பக்தவத்சலம், கனம் பூவராகன், பி. பரமேஸ்வரன், எம்.எல்.ஏ., திரு. ஒ. வெங்கடசுப்பா ரெட்டியார், எம்.எல்.ஏ., திரு. டி. புருஷோத்தம் முதலியவர்கள் கல்வியின் அவசியம், மக்கள் அறிவை விருத்தி செய்ய நூல் நிலையங்களின் அவசியம், பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகு கிராமங்களின் முன்னேற்றம் முதலியவைபற்றி மிக விளக்கமாகப் பேசினர். ஆணையாளர் திரு. எல். சுந்தரராஜன், பி.எஸ்ஸி., (விவசாயம்) டி.எச்., அவர்கள் நன்றி கூறியபின் தேச வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

புத்தக விமர்சனம்

[புத்தக விமர்சனத்திற்காகத் தங்கள் வெளியீடுகளை அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்—ஆசிரியர்.]

தமிழகம்

ஆசிரியர் : ஆறு. சுப்பிரமணியம்,
வெளியிடுவோர் : ஆறு. சுப்பிரமணியம், குன்றக்குடி
விலை : 10 காசு

தவத்திரு குன்றக்குடி அடிகளாரை சிறப்பு ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்படும் இக்கிழமை இதழில் கருத்துச் செறிவுள்ள சொற்பொழிவுகள், கட்டுரைகள் உள்ளன. 1—6—1964-ல் வெளியிடப் பெற்றுள்ள இதழில் மாவீரர் ஜவஹர்லால் நேரு அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அடிகளார் அவர்கள் தலையங்கம் எழுதியுள்ளார். "ஜனநாயக சோசலிச தத்துவத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு அரசினருடையதா? மக்களுடையதா? என்பது பற்றிய பட்டிமன்ற விவாதம் பிரசுரிக்கப்பெற்றுள்ளது. தமிழார்வம் மிக்க அனைவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறத் தக்க வகையில் இவ்விதழ் கருத்துக்கோவையாய் அமைந்துள்ளது.

*

எழுத்தாளன்

ஆசிரியர் : அ. வெ. ர. கிருஷ்ணசாமி,
வெளியிடுவோர் : அ. வெ. ர. கிருஷ்ணசாமி, திருச்சி.
விலை : 25 காசு

தமிழ், ஆங்கில மாதப் பத்திரிகையான எழுத்தாளனின் 15—5—1964 தேதிய பிரதியில் அமரர் பாரதியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. 'அணையா நெருப்பு' என்ற தலைப்பில் பஞ்சாப் படுகொலை வரலாறு சுவைபடத் தொகுத்தெழுதப்பெற்றுள்ளது. ஒவ்வொரு எழுத்தாளரில்லத்திலும் இருக்கவேண்டிய பத்திரிகைகளில் இது ஒன்று.

*

அன்னை நாடு

ஆசிரியர் : கோ. செல்வம், எம்.ஏ., பி.எல்., பி.டி.,
வெளியிடுவோர் : ஆசிரியர், திருமுருகா அச்சகம்,
ஆற்காட்டுச் சாலை, சென்னை-24.
விலை : 15 காசு

திங்கள் இருமுறை வெளிவரும் முதல் ஏட்டை மிகச் சிறப்பாக அமைத்துள்ளார். திரு. காமராஜ் அவர்களைத் தானைத் தளபதியாக சித்தரித்து அட்டைப் படமாக்கியுள்ளார். காங்கிரசின் லட்சிய முரசாக இவ்வேடு விளங்கும் வகையில் அரசியல், சமூக பொருளாதாரக் கட்டுரைகள் உள்ளன. சிந்தனையையும், மனித உணர்வையும் தட்டி எழுப்பும் கருத்தாழம் மிக்க நல்ல பல கட்டுரைகள் உள்ளன. தலையங்கம் கருத்துக் குவியலாய் அமைந்துள்ளது. மொத்தத்தில் இது ஒரு சிறந்த ஏடு!

பணையின் உபயோகம் பாமரர்க்குத் தெரியும்!

ஆடுகளை அடிக்கடி குட்டி போடச்செய்யலாம்

ஆடு பராமரிப்பாளர் : ஐ. மலாஷெங்கோ

எங்கள் ஆடு பராமரிப்புக் குழுவிற்கு 1958—1959-லும் மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. இவ்விரு ஆண்டுகளிலும் எங்கள் கிடையைச் சேர்ந்த ஆடுகள் வழக்கமான இரு முறைக்குப் பதிலாக மூன்று முறை குட்டிகள் போட்டன. நூறு பெண் ஆடுகளுக்கு 374 குட்டிகள் வீதம் கிடைத்தன. இரண்டு ஆண்டுகளில் மூன்று முறையும், ஓராண்டில் இரு முறையும் குட்டிகள் போடச் செய்வது இன்று பல சோவியத் பண்ணைகளிலும் பழக்கமாகி வருகிறது. இதனால் ஆடுகளின் தொகை மிக வேகமாக அதிகரிக்கிறது.

என் பாட்டனார் எனக்கு ஆடு பராமரிப்பு வேலை கற்றுக் கொடுத்தார். குட்டிகள் பால் குடிப்பது நின்றதுமே ஆடுகளுக்கு சில காலம் வேட்கைப் பருவம் ஏற்படுவதை நாங்கள் கவனித்தோம். ஒரே ஆண்டில் இரு முறை குட்டிகள் போடும்படிச் செய்ய முடியாதா என்ற கேள்வியை இது எங்களிடையே எழுப்பி வந்தது. இதர ஆடு பராமரிப்பாளர்களுடன் இதுபற்றி விவாதித்தேன். கல்லூரிப் படிப்புடைய எங்கள் கூட்டுப் பண்ணையின் பிரதம கால்நடை நிபுணர் வி. நிகிதினைக் கலந்தாலோசித்தேன். எல்லோரும் என் திட்டத்தை ஆமோதித்தனர். புதிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமுன் நாங்கள் பல தயாரிப்பு வேலைகளைச் செய்தோம். ஆடுகளுக்குக் கூடுதலாகத் தீவனம் அளித்தோம். 1959 ஏப்ரல் முதலாக எங்கள் மந்தையின் பெண் ஆடுகள் யாவற்றுக்கும் செயற்கையில் கருவுறச் செய்யும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்தோம். செப்டம்பர் மாதத்திற்குள் பல ஆடுகள் சினையாகி விட்டன. அக்டோபர், நவம்பரில் குட்டிகள் போட்டன.

கூட்டுப் பண்ணையில் தீவனத்திற்குப் பஞ்சமில்லை. போதிய அளவு சிறந்த தீவனம் அளித்து நல்ல முறையில் பராமரித்தால் ஆடுகளை அடிக்கடி குட்டிபோடச் செய்யலாம் என்பது தெளிவாகியது. குட்டிகளுக்குப் பால் மறக்கும்போது அவற்றின் எடை சராசரி 22 முதல் 25 கிலோகிராம் ஆகி விடுகிறது.

இந்தப் புதிய முறையை நாங்கள் அனுசரிக்கத் தொடங்கியதற்கு முன்பு ஆண்டிற்கு நூறு பெண் ஆடுகளுக்கு 80, 85 குட்டிகள் வீதமே கிடைத்தன. ஆனால், இப்பொழுது 145 குட்டிகள் வீதம் கிடைக்கின்றன.

ஆடுகள் அடிக்கடி குட்டி போடுவதால், எங்கள் பண்ணையின் வருடாந்திர உரோம உற்பத்தி 321 சென்ட்னரும், இறைச்சி உற்பத்தி 2,317 சென்ட்னரும் அதிகமாகியுள்ளன.